விலை: சதம் 75 ★★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 புரட்டாதி 4 துல்ஹஃ 20 இதழ் 218
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 20-9-1981

அதிக முட்டைகள் பெறுவதற்கு பாவியுங்கள்-
கோழி வளர்ப்பில் பல வருட அனுபவமுடைய சிறந்த நிபுணர்களின் ஆலோசனைப்படி நவீன யந்திரங்களிலில் தயாரிக்கப்பட்ட

'LAYTOP MASH'

விபரங்களுக்கு:
அண்ணு இன்டஸ்றி
இணுவில்
போன்: 7412, 7413

இனம்
50 மில்லிவைற் நீலசோப் மேலுறைகள் அல்லது 10 மில்லிவைற் பார் சோப் மேலுறைகளை அனுப்பி ஒரு அழகிய சரஸ்வதிப் படமும், தேவி தோத்திரமும் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க் வைற்
யாழ்ப்பாணம்

★ வல்லையில் நடந்த படுகொலை எதிரொலி

# மந்திகை ஆஸ்பத்திரியில் ஆயுதப்படை பாதுகாப்பு

## சந்திகளில் சோதனை! எதிரிகள் எவரும் சிக்கவில்லை

[யாழ்ப்பாணம்]

**கம்பர்மலை கொலை வழக்கு எதிரிகள் மீது நேற்று முன்தினம் வல்லை உப்புவெளி வீதிச் சந்தியில் நடத்தப்பட்ட தாக்குதலில் கொலையுண்டவர்களின் சடலங்கள் மந்திகை ஆஸ்பத்திரிப் பிரேதச் சாலையில் வைக்கப்பட்டிருப்பதினாலும், படுகாயமுற்ற ஒருவர் அங்கு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருப்பதாலும் மந்திகை ஆஸ்பத்திரியில் ஆயுதப்படைகளின் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

**வடமராட்சியிலுள்ள முக்கிய சந்திகளிலும் ஆயுதப் படையினர் வாகனங்களைப் பரிசோதனை செய்து வருகின்றனர்.**

குறிப்பாக வல்வெட்டித்துறை, கம்பர்மலை, மீசாலை போன்ற இடங்களிலும் ஆயுதப்படையினர் சந்தேகத்துக்குரிய வீடுகளை சோதனைக்குட்படுத்திவருவதாகத் தெரியவருகிறது.

வல்லைவெளி உப்பளரோட்டுச்சந்தியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் கைதானவர்களான மூவரி கொலையுண்டதும், ஒருவர் பலத்த காயத்துக்குள்ளானதும், ஒருவர் தலைமறைவானதும் தெரிந்ததே.

இக்கொலைக்கான நபர்களைத் தேடி ஆயுதப்படையினர் வலைவிரித்துள்ளனர்.

கைதிகளில் ஒருவரான காணாமல்போன இராசதுரை இக்கொலைக்குக் காரணமாயிருந்தவர்களால் கடத்திச்செல்லப்பட்டாரா? அல்லது தப்பியோடிவிட்டாரா என்பதுபற்றிபொலிசார் இன்னமும் ஒரு முடிவுக்கும் வரமுடியாமலிருப்பது தெரிகிறது.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் கொலையுண்ட மூவரின் சடலங்களின் பிரேதபரிசோதனைகள் நேற்று பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

### பிரேதபரிசோதனை

மந்திகை ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி திரு. கே. மயில்வேறும் பெருமாள் பிரேதபரிசோதனை நடாத்தினார்.

மூவரின் சடலங்கள் பிரேதபரிசோதனையின் பின் இறந்தவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திரு. கே. எஸ். மகேசன் ஆஸ்பத்திரிக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு சென்றுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட கைதிகளில் ஒருவரான தில்லை நடராசா மயக்கநிலையிலிருந்து தெளிவடைந்து விட்டாரென்றும், அவரது உடல் நிலைமைதேறி வருவதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

நிறைக்கசுவனரின் பாது
(8-ம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணத்தில் 'வாஷிங்டன்போஸ்ட்' நிருபர்

[யாழ்ப்பாணம்]

'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையின் தெற்காசிய பிராந்திய நிருபர் ஸ்ருவார்ட் ஆயுர்வாஸ், நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். இங்குள்ள எம்.பி. க்களையும், யாழ். மாநகர முதல்வரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். அவையில் இடம்பெற்ற வன்செயல்களின்போது யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்ட இவர், சம்பந்தப்பட்டவர்களுடனும் உரையாடினார். [மா-அ]

### மாவிட்டபுரம், நல்லூர் திருவிழாக்களில் கடமைபுரிந்த சாரணருக்குப் பாராட்டு

[நல்லூர்]

"நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாநாட்களிலும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருவிழா நாட்களிலும் சாரணர்களின் சேவையை நான் நேரில் கண்டறிந்தேன். அவர்களின் சேவையைப் பாராட்டி கல்லூரி அதிபர்கள் மூலம் பாராட்டுப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளேன்."

யாழ். கச்சேரி கருத்தரங்கு மண்டபத்தில் நடந்த யாழ். மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் விசேஷ கூட்டத்தில் கலைமைவகித்துப் பேசிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டத்தில், உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவை அலுவலர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், அதிபர்கள், உதவி ஆணையாளர்கள், சாரணத்தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்ட ஆணையாளர் திரு. சிகாந்தமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார்.

கல்லூரி உற்சவத்தின்போது சாரணரின் மகத்தான சேவையின் பயனாகவே புதிய அங்கத்தவர்கள் இச்சங்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார். [க-அ]

### கருகிமாண்டனர்

சிவகாசி, செப். 19

சிவகாசிக்கு அருகே இன்று காலை நிகழ்ந்த தீவிபத்தில் முப்பது பேர் கருகி சாம்பலாஞ்சுகள்!

இக்கோரச் சம்பவம் பட்டாசு தயாரிக்கும் தொழிற்சாலையில் நிகழ்ந்தது.

மின்ஒழுக்குக் காரணமாகவே தீவிபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. தொழிற்சாலையில் வேலை செய்த மிகுதி ஐந்துபேர் படுகாயமடைந்துள்ளனர்.

## அரசுடன் பேச்சு நடத்துவதில் தவறிழைக்கவில்லை!

### வன்னியர் நினைவுவிழாவில் அமிர்

[மாவிட்டபுரம்]

அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் எமது இலட்சியத்தை கைவிட்டு விட்டோமென்றோ எமது பாதையிலிருந்து தவறி விட்டோமென்றோ எவரும் நினைத்துவிடக்கூடாது. கலவரங்களால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியுற்ற எமது மக்கள் தமக்கு வாழ்வளிக்குமாறு எம்மிடம் கோரும்போது அதனை எம்மால் செய்யமுடியாத நிலையில் அரசிடம் பேசி அவர்களுக்கு வாழ்வளிப்பதில் தவறிருக்க முடியாது. அத்துடன் மேலும் பல விடயங்களில் அரசு கொள்கையளவில் உடன்பட்டிருப்பதும் இப்பேச்சுவார்த்தையின் பலாபலனே என்பதை எவரும் மறுப்பதற்கில்லை"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மாவை கொல்லங்கலட்டி கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடந்த அமரர் வன்னியசிங்கம் நினைவு விழாவில் பேசுகையில் கூறினார்.

சட்டத்தரணி என். ஸ்ரீவேஸ்வராதலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:

"இந்த நாட்டிலே பண்டாரநாயக்காவும் அமரர் வன்னியசிங்கமும் ஏக காலத்தில் அரசியலில் பிரகாசித்தவர்கள். பண்டாரநாயக்கா வளர்த்த இயக்கம் அரசியல் அதிகாரத்திற்காக போராடியது. இன்று அந்த இயக்கத்திலே போட்டி பூசல்கள் இடம் பெற்று பிளவுகள் ஏற்பட்டுள்ள ஆனால் வன்னியசிங்கம் வளர்த்த தமிழ் மக்களது விடுதலைக்கான இயக்கம் இன்று தனது பாதையில் சிறப்பாக முன்னேறி தனது இலக்கை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. அவருடைய கொள்கைப்பிடிப்பும் நெஞ்சுறுதியும் நம்மெல்லாரிலும் முன்மாதிரியாக விளங்கின என்றால் மிகையாகாது.

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசு, தனியார் ஊழியருக்கு சம்பள உயர்வு

### ஜனாதிபதி நம்பிக்கை

[சொழும்பு]

வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க வரவு செலவுத்திட்டத்தில் அரசு ஊழியர்களுக்கும் தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படும் என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா உறுதியளித்துள்ளார்.

நேற்றுக் காலை தபரபேன் ஹோட்டலில் நடைபெற்ற தோட்டத்துரைமார் சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா மேற்படிக்கருத்தை வெளியிட்டார்.

மலையகப் பகுதியில் அண்மையில் நிகழ்ந்த வன்செயல்கள் பற்றி ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில்;

"வன்செயல்களில் எனது இனத்தைச்சேர்ந்தவர்களும் ஈடுபட்டு, தாக்குதல்கள் நடத்தியிருப்பது அறிந்து மிகவும் வருந்துகிறேன். குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்றுகூறினார் [ம]

## சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

# பதவி வெற்றிடம்

பொதுமுகாமையாளர் தரம் 11 (இரண்டு)

மேற்குறிப்பிட்ட பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயது:- 23 - 50

கல்வித்தகமை:

(1) கூட்டுறவுப்பயிற்சியுடன் 3 வருடகால அனுபவமுடைய பட்டதாரி அல்லது (2) இரண்டு வருடகால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தரத் தராதரப்பத்திரம் உடைய பட்டதாரி அல்லது (3) தரம் 111 பதவியில் ஒரு வருட அனுபவமும் கூட்டுறவு வேலையாளர் உயர்தரத் தராதரப்பத்திரமும், பெற்றுள்ள பட்டதாரி அல்லது (4) 50 எட்சேர் ரூபாயில் வருடாந்த மொத்த விற்பனைவரத்தையைக்கொண்ட முகாமை பதவி கொண்ட விற்பனைவரத்தையைக்கொண்ட முகாமை பதவியில் 5 வருடகால அனுபவம் அல்லது (5) 10 வருடகால அனுபவம் பொருந்திய முகாமைத்துவப் பரிசோதகரி.

வயதெல்லைத்தகமை:-

குறைந்தது கடந்த 5 வருடமாவது யாழ் மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல்வேண்டும்.

சம்பளம் அளவுத் திட்டம்: ரூபா 600/- 1000/-

40/- X 10

(அத்துடன் அதிகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்)

விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் 50 சதம் செலுத்தி விற்பனைப்பிரிவில் பூர்த்தி செய்து பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வி சான்றிதழ், தொழிற் தகைமைச் சான்றிதழ், வதிவிட அத்தாட்சிப்பத்திரம், கிராமசபையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் மேற்படி உறையின் இடதுபக்க மேல்மூலையில் "பொதுமுகாமை வாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 6-10-81க்கு முன் கீழ்க்காணும் விலாசத்தில் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

த. சிதம்பரப்பிள்ளை,
தலைவர்,

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்.
சாவகச்சேரி.

16-8-81. (0990)

---

## ரிம்மர் ஹோல் வகுப்புகள்

TRIMMER HALL CLASSES

21/6, கோப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

G. C. E A/L கலை, வர்த்தகம் 1982 ஏப்ரல் மீட்டல் வகுப்புக்கள்

1983 ஏப்ரல் வகுப்புக்கள்

B. T I வகுப்புக்கள்

(1982 பெப்ரவரி பரீட்சைக்கான)

ஆரம்பம்: 03—10—1981

நிர்வாகம்

(0951)

---

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

மேற்படி சங்கத்தின்

வருடாந்த விழா 11-10-1981 ஞாயிற்றுக்கிழமை

கல்லூரியில் நிகழும்.

காலை 10 மணிக்கு வருடாந்தக் கூட்டமும்

பிற்பகல் 1 மணிக்கு மதியபோசனமும் நடைபெறும்.

வருடாந்தக் கூட்டத்தில் ஏதாவது பிரேரணைகள்

கொண்டுவர விரும்பின்

அதற்குரிய அறிவித்தலை 3-10-1981க்கு முன்

செயலாளரிடம் கொடுக்கவேண்டும்..

மதியபோசனத்தில் கலந்துகொள்ள விரும்புவர்கள்

அங்கத்தவர்கள் பொருளாளரிடம்

(திரு. S. பொன்னம்பலம், யா. இ. க)

ரூபா 5/- கட்டிப் பிரவேசச்சீட்டு பெற்றுக்கொள்ளவும்.

W. S. செந்தில்நாதன்,
செயலாளர்.

யா. இ. க
20-9-981. (0998)

---

## வெளிவந்துவிட்டது

19-10-81

## வியாழமாற்றம்

# உங்களுக்கு எப்படி

எழுதியவர்: இ. வெங்கடேசஐயர்

பல்லிரண்டு ரசிகளும் அடங்கியது ரூபா 3/-

V. P. P. ஆடர் ஏற்றுக்கொள்ளப்படும்.

இ. வெங்கடேச ஐயர்
"இரகுநாதையர்"
சோதிட பரிபாலன மடம்
கொக்குவில்.

சோதிடவிலாச புத்தகசாலை
46, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(0985)

---

## மயிற்சி

வெல்டிங், மோட்டர் மெக்கானிசம், வயறிங் வகுப்புக்கள் (செய்முறையுடன்)

ஆரம்பம்: C. E. T. யாழ்ப்பாணம் கல்வி நிலையம், [சாந்தி னிமாவிற்கு முன்] 22, ராமையா செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். 0975

---

## யாழ்ப்பாண அக்கடமி

க.பொ.த. உயர்தர பரீட்சை

ஏப்பிரல் 1982

## மீட்டல் வகுப்புகள்

வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன இன்னும் சில இடங்கள் மட்டுமே உண்டு சேர விரும்புவோர் உடன் சேரவும். 1981 பரீட்சை பெறுபேறுகளில் பல மேலதிக வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

அதிபர்

தொலைபேசி எண்: 617.
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 0946

---

சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கழிவு மா, சீனி விற்பனை

மேற்படி சங்கத்தில் பின்வரும் பொருட்களை கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைவு செய்வதற்கு விரும்புவோர் தங்கள் கேள்வி விண்ணப்பங்களை "பொதுமுகாமையாளர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் இடதுபக்க மேல் மூலையில் "கழிவுப் பொருள் கேள்வி" என குறிப்பிட்டு 30-9-81க்கு முன் அனுப்புதல் வேண்டும்.

பொருள் விபரம்

1. மா — 2189 கிலோ
2. சீனி — 559 கிலோ

பொதுமுகாமையாளர்,
சங்கானை,
17-9-81 0988

---

சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## கேள்வி விளம்பரம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 5232 வெற்றுச்சாக்குகளுக்கு கேள்விப் பத்திர மூலம் விற்பனைவு செய்யப்படும். வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப்படிவம் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்கள் பதிவுத் தபால் மூலம் இடதுபக்க மூலையில் "வெற்றுச் சாக்குகள் கேள்வி" என்ற எழுதப்பட்டு "பொதுமுகாமையாளர், சங்கானை, ப. நோ. கூ. சங்கம், சங்கானை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் இடதுபக்க மேல் மூலையில் "கழிவுப் பொருள் கேள்வி" என குறிப்பிட்டு 30-9-81க்கு முன் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி;
30-9-1981

பொதுமுகாமையாளர்,
சங்கானை,
17-9-1981 0989

---

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

உரிப்பிட்டி மகளிர் கல்லூரி கிரவுண்டு மைதானத்திற்கு அருகாமையில் (4) நான்கு பரப்புக் காணி தண்ணீர் வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். த. க. ராஜேந்திரன், C/o. S. சோபாசக்தி, பொலிஸ்டி ஆலடி வடகோவைக்கு முன், வல்வெட்டித்துறை. 0993

---

புதுரமைக்கப்பட்ட ஹொண்டா CD 125, C 90 செல்வின்ராட் மொடல்கள் பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் & கோ., கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0992

---

பிளாசிக்டோன் டீசல் எஞ்சின் 26 H.P O.P., மொடல் நல்லநிலையில் உள்ளது. நெல் குற்றும் ஆலைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் உகந்தது. தொடர்பு கொள்ளும் விலாசம்:- சருணா அரிசி ஆலையும், வட்டக்கச்சி, கிளிநொச்சி. 0987

---

எமது நிறுவனத்தில் தமிழ், ஆங்கில தட்டச்சுப் பொறியும் ரேனியோ டெலிபிரிண்டரும் விற்பனைக்குண்டு. தொடர்பு: நிர்வாகி, சங்கர் ஹார்ட்லி இன்டஸ்ரீஸ், பிரதான வீதி, பருத்தித்துறை. 0865

---

ஆர்டருக்கு கோயில் மணி (25 ரூபா — 1000 ரூபா வரை) குத்துவிளக்குகள் (3 அடி-5 அடி வரை) ஆர்டருக்கு செய்து கொடுக்கப்படும். கோயில்மணிகளும் திருத்தியும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்க: பொன்னையா இரட்ணசிங்கம், இல:3, சந்தானமாதா கோவில் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். 0986

---

B M C. 550 Morris LD350 மொடல் இரண்டு லொறிகள் கைடனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. விற்பனைக்குண்டு. பார்வையிடவும். மோரிஸ் என்ரபிறைசஸ், நெல்லியடி, கரவெட்டி. 1000

---

சுழிபுரம் சந்தியிலிருந்து 200 யார் தூரத்தில், யாழ்ப்பாணம் - காரைநகர் பிரதான வீதிக்கு அருகாமையில் தென்புறத்தில் 5 பரப்பும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி பூ. நடராசா, முகாந்திரம் ஒழுங்கை, மல்லாகம். 0973

---

British Leyland Van LD 7. FG 350 27 ஸ்ரீ விற்பனைக்கு உண்டு. 22, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி. 0971

---

உறுதியான பெரிய நிலக்கீல் இறும்புப் பெட்டகம். 12 லாரி உள்ளது 5½ அடி உயரம் 2½ அடி அகலம் நகைக்கடை அலுவலகம் பாங்குக்கு ஏற்றது உடன் பார்வையிடவும். பரமேஸ்வரி நகைமாடை, 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 0974

---

## காணவில்லை

வெள்ளையும், மணிறமும் கலந்த நாய்க்குட்டியை காணவில்லை. இவ: 1, செட்டித் தெரு நல்லூரில் ஒப்படைக்கவும். சன்மானம் ரூபா 100/- வழங்கப்படும். 0991

---

## தவறிவிட்டது

பிரிட்டிஷ் தபாற் கிட்டங்கி, 125 பவுண்ஸ் சர்வதேச காசுக்கட்டளை, ஒன்பது தினங்களுக்கு முன்பு தேவியகடையான அறிவிப்பு என்பன ஒரு எண்வலப்புடன் 15-9-81 அன்று யாழ் மத்திய பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவருக்கு ரூபா 200/- சன்மானம் வழங்கப்படும். A. சுரேஸ், 741, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0994

---

வாரிஸ் ஆறு திறப்புவிளை சோப்பை, சோவில் வீதி, ஸ்ராலி வீதி, மணிக்கூண்டு வீதி, மின்சார நிலைய வீதிகளுக்கு தவறிவிட்டது. கண்டெடுத்து ஒப்படைப்பவருக்கு சன்மானம் வழங்கப்படும். டாக்டர் சிவஞானவேல், கிராசினர் ஆஸ்பத்திரி, யாழ்ப்பாணம். 0999

---

## தேவை

மாதரசபை எல்லைக்குள், சகல வசதிகளுடனும் இரண்டு படுக்கை அறைகள் கொண்ட வீடு ஒன்றுவருடத்துக்கு தேவை. ரூ 250 — ரூ. 300 இடையில் வாடகை தரப்படும். விண்ணப்பிக்க விளம்பர இல: 0966. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 0966

---

எங்கள் இல்லை வைத்தியசாலைகளுக்கு தாதிகள் (Nurses) தேவை. விரும்பியவர்கள் நேரிலோ கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். டாக்டர் இராசலிங்கம் ராஜன் மெடிக்கல் சென்ரர், சுன்னாகம். 0978

---

ஸ்ரூடியோ வேலை பழகக் கூடிய ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். ஜோதீஸ்வரா ஸ்ரூடியோ, நெல்லியடி, கரவெட்டி. 1001

---

சோதிடப்பாலவங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுவந்த தட்டச்சுப் பொறிகள் (ஆங்கிலம்) விற்பனை செய்ய விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு நேரடியாக அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். திருவாளர் க. கதிரேசு, 11, சின்னப் ஒழுங்கை, கலட்டி, யாழ்ப்பாணம். 0950

---

## மினிபஸ் மோதி கொட்டகை சேதம்

(சங்கானை)

சங்கானை தேவாலய வீதிக்குப் பக்கத்திலுள்ள பஸ் நிறுத்துமிடக் கொட்டகையை இவ்வழியே சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த "மினிபஸ்" ஒன்று மோதி பலத்த சேதத்தை ஏற்படுத்தியதுடன் மினிபஸ்ஸும் சேதம் அடைந்துள்ளது. மினிபஸ் உரிமையாளர் என்ற சொத்தி செலவில் மீண்டும் பஸ் நிறுத்தும் கொட்டகையைப் பழைய நிலைக்கு அமைத்துத் தரவு உறுதியளித்து திருத்த வேலையில் ஈடுபட்டுள்ளார்.

---

## நன்றி

மணமக்கள்

மகேசன் — மகாலட்சுமி

இவர்களது திருமணம் 31-8-1981ல் தமிழ்நாடு திருமங்கலத்தில் நடந்தபோது நேரில் வருகை தந்தும் பரிசில்கள் வழங்கியும் வாழ்த்துச்செய்திகள் அனுப்பியும் சிறப்பு வித்த நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படிக்கு

4, பிரப்பங்குளம் வீதி, பெ. க. தனசாமி—இலட்சுமி
யாழ்ப்பாணம். தம்பதிகள்.

(0996)

# மனிதகுலநன்மையா பெரும் கம்பனிலாபமா பெரிது?

கடந்த எட்டு ஆண்டுகளாக ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்பட்ட ஒரு குழு கடல் பிராந்திய உடன்படிக்கை ஒன்றை உருவாக்கும் சிரமம் மிக்க பணியில் ஈடுபட்டுவந்தது. இக்குழுவிற்குக் காலஞ்சென்ற இலங்கை ஐ. நா. தூதுவர் ஷேர்லி அமரசிங்கா தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

'இடியப்பச்சிக்கலான' பல பிரச்சினைகளை இக்குழு மிகப் பொறுமையாகச் சிக்கவிழ்த்து வளர்ச்சியடைந்த நாடுகளினதும் வளர்முக நாடுகளினதும் நலன்களுக்கிடையே ஒருவாறு சமரசமும் கண்டது.

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்து கடல் உடன்படிக்கைச் சட்டத்திற்கு 150 நாடுகள் கைச்சாத்திட விருந்தன.

ஆனால் வெண்ணெய் திரண்டுவருகையில் தாழி உடைந்த கதையாய்த் தான் இது முடிந்துவிட்டது.

கடலுக்கு அடியிலுள்ள இதுவரையிலும் செம்மையாக ஆராயப்படாத செல்வங்கள் மனித குலத்தின் பொதுச் சொத்தாகக் கருதப்பட வேண்டு. அவற்றின் பயன்பாடு எல்லாநாடுகளுக்கும் சுவறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு அனைத்துலக கடல் படுக்கை அதிகாரசபை ஒன்று நிறுவப்பட்டு மேற்பார்வை கண்காணிப்பு வேலைகளை அது மேற்கொள்ளவேண்டும் என எத்தனையோ வாதப்பிரதிவாதங்களுக்குப் பின் உடன்பாடு ஏற்பட்டது.

இப்புவியின் இறுதி எல்லையான விண்வெளி ஆராய்ச்சி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு எவ்வளவோ முன்னேறி விட்டது; சமுத்திரத்தில் பொதிந்திருக்கும் எண்ணற்ற மூல வளங்களை அகழ்ந்து வெளிக்கொணருவதற்கான தொழில்நுட்ப அறிவு செல்வந்த நாடுகளிடம் தான் உள்ளது அதேவேளை இந்தச் செல்வங்கள் ஏழை நாடுகளுக்கும் சுவற வேண்டும். இந்த எதிர்த்துருவ நலன்களை ஒருங்கிணைப்பதற்காகத் தான் மேற்கண்ட தகவுரையை குழு வெளியிட்டது.

## வெளியான்

ஜிம்மி கார்ட்டர் ஜனாதிபதியாகவிருந்த காலத்தில் அமெரிக்காவும் மற்றும் நாடுகளும் இந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டன.

ஆனால் பெரும் அமெரிக்க கம்பெனிகளால் இவற்றை விழுங்கமுடியவில்லை; கடல் சொத்து மானிடத்தின் பொதுச்சொத்து என்ற சட்ட எண்ணக்கரு வழமைக்குமாறான ஒன்று எமக்குப் பழக்கப்பட்டுவிட்ட கருதுகோள்களுக்குச் சவாலாக அமையும் ஒன்று மீன்முள்ளாய் இவர்களின் தொண்டைக்குள் பொறுத்து உறுத்தியது இந்த ஆலோசனைகள் சோஷலிச மயமானவை என்று அவை கண்டித்தன.

சூறையாடல் மூலம் கொள்ளை இலாபத்தைப் பெறும் இந்த பல்தேச வணிகக் கூட்டுத்தாபனங்களின் எதிர்ப்புத் தவிடுபொடியாகியிருக்கும். ஆனால் அவர்களுடைய நல்ல காலத்துக்கு (இது மனித குலத்திற்கு எத்தகைய காலமாக அமையும் என்பது சொல்லாமலே விளங்கும்) ஜனாதிபதி தேர்தலில் கார்ட்டர் தோல்வியுற்றார்; ரேகன் வென்றார்.

உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடும் காலம் நெருங்குகையில் புதிய அமெரிக்க நிர்வாகம் ஒரு 'குண்டை'த் தூக்கிப்போட்டது; தனது நிலைப்பாட்டை மீள்ஆய்வு செய்யப்போவதாக அமெரிக்கா அறிவித்தது! எல்லோருக்கும் 'பேப்பே!'

இந்து சமுத்திர சமாதானப் பிராந்திய மாநாட்டையும் கடல் உடன்படிக்கை மகா

[8-ம் பக்கம் பார்க்க

## கோவூரின் கொடை

பகுத்தறிவாளர் கோவூரின் கண்டனங்கள் மத நம்பிக்கையாளர்களுக்கு வேதனையளிக்கவே செய்திருக்கும்; ஆனால் பெரிதாகப் புகழப்படும் மதப் பெரியார்கள் எவரும் எளிதில் செய்ய முன்வராத நல்ல காரியங்கள் சிலவற்றை டாக்டர் கோவூர் செய்துள்ளார். மறைவுக்குப் பின்னரும் அவரை அவை நினைவூட்டிக்கொண்டிருக்கும்.

கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரிக்கு அவர் தமது உடலின் எலும்புக்கூட்டை விஞ்ஞான மாணவர்கள் பயன்பெறுவதற்காக இறக்கு முன்னரே அன்பளிப்புச் செய்து எழுதிவைத்துவிட்டது ஒருபுறமிருக்க சதையுடன் கூடிய அவரது சடலம் விஞ்ஞான மாணவர்கள் ''வெட்டி, கொத்தி, கிழித்து-அறுத்து' பரிசோதனை செய்வதற்கும் அவர் ஏற்கனவே அனுமதியளித்திருந்தார். இதைவிட அவரது இரு கண்களையும்கூட தானமாக வழங்கியிருந்தார். அந்தக் கண்களினால் சென்னை வாசிகள் இருவர் இப்பொழுது கண்ணொளி பெற்றிருக்கிறார்களாம்.

### மாற்று எரிபொருள்

மண்ணுக்கடியிலிருந்து பெறப்படும் எரிபொருளுக்குப் பதிலாக சாதாரண கழிவு பொருள்களிலிருந்து பெறப்படும் எரிபொருள் மிக விரைவிலேயே உலகெங்கும் மிகச் சாதாரணமாகக் கிடைக்க ஆரம்பித்துவிடும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

கழிவு பொருள்களிலிருந்து மதுசாரத்தை உற்பத்தி செய்வதில் பிறேஸில் நாடு மிக முன்னேற்றம் கண்டிருக்கிறதாம். பிலிப்பைன்சில் விவசாயக் கழிவுப் பொருட்களான உமி, வைக்கோல், தென்னம் மட்டை போன்றவற்றிலிருந்து மதுசாரம் தயாரித்து எரிபொருளாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். இது வெற்றிபெறும்போது பிலிப்பைன்ஸ் எண்ணெய் இறக்குமதியை முற்றாகவே நிறுத்திவிட முடியுமாம்.

ஆபிரிக்காவில் கால்நடைகளுக்குத் தீனியாகப் போடப்படும் ஒருவித மரத்தின் குழைகளிலிருந்து எரிபொருள் தயாரிக்கப்படுகிறதாம்.

### வெரிட்டாஸ் வானொலி

பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைநகரான மணிலாவிலிருந்து ஒலிபரப்பாகும் வெரிட்டாஸ் வானொலியில் தமிழ் நிகழ்ச்சிகளில் தமிழர்பற்றிய செய்திகளுக்கு முக்கிய இடம்கொடுக்கிறார்கள். இலங்கையில் சமீபத்தில் இடம்பெற்ற வன்செயல்கள், தமிழ் நாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள்பற்றியெல்லாம் விபரமாகச் சொன்னார்கள். இரவு ஏழு ஐம்பதைந்திலிருந்து எட்டு மணிவரை இந்நிகழ்ச்சியில் செய்திகள் ஒலிபரப்பாகின்றன.

அந்நிகழ்ச்சியில் இந்த வாரத்துக்கான பொது அறிவுப் போட்டியில்; இலங்கையின் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருக்கும் தமிழரின் பெயர் என்ன என்பதுவும் ஒரு கேள்வியாகும்.

'பேனா'

## மக்கள் கருத்து

### சோதிடர்கள் கவனத்துக்கு

பண்டுதொட்டு அகில உலக மதங்களுள் மூத்த சமயம் எனப்போற்றப்பட்டும் சைவ மக்களால் சீரிய பண்பாட்டுடன் ஒழுகப்பட்டும் வருவது சைவசமயமென்பது யாவரும் அறிந்ததே. பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் வேதநெறி தழைத்தோங்க சைவமக்கள் தங்களது கொண்டாட்டங்கள் அதாவது வருடப்பிறப்பு தீபாவளி, சிவராத்திரி, நவராத்திரி போன்ற விசேட தினங்களைத் தொன்மையிலிருந்து சமய முறைப்படியும் குறிப்பிட்ட தினத்திலும் அகில உலகத்திலுள்ள சைவ மக்களாலும் கொண்டாடப்பட்டும் பேணப்பட்டும் வந்திருப்பது தெரிந்ததே. இதனால் சைவம் தழைத்தோங்கியது. ஆனால் நாளடைவில் சோதிடர்கள் பலர் தோன்றி இந்துக்களின் விசேட தினக் கொண்டாட்டங்களையோ அல்லது வைபவங்களையோ ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தங்கள் கணிப்பின்படி மாறுபடக்கணித்து குறிப்பிட்ட தினங்களை முன்பின்னாக மாற்றுவதால் எந்த நாள் நவராத்திரி ஆரம்பம் எந்த நாள் சிவராத்திரி ஆரம்பம் எந்த நாள் வருடப்பிறப்பு என்று அனைத்து மக்களும் பார்க்கும்போது ஒருவர் இன்று நவராத்திரி ஆரம்பம் என்றும் மற்றவர் நாளை ஆரம்பம் என்றும் கூறுகிறார்கள் குறிப்பிடுகிறார்கள் இதனால் மக்கள் ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள், இப்படியாக சோதிடர்கள் மக்களைத் தவறான வழியில் வழிநடத்துவதுடன் தங்கள் சமயத்திலேயே அவநம்பிக்கையை ஏற்படுத்துகிறார்கள். எல்லா சைவ மக்களும் தங்கள் விரத நாட்களையோ விசேட தினங்களையோ ஒருமுகமாகக் கொண்டாட அனுஷ்டிக்க முடியாத சூழ்நிலையை உருவாக்குகிறார்கள்.

அகில உலகத்திலுமுள்ள சைவத்தமிழ் மக்கள் மிகவும் புனிதமாகவும் இன்பமாகவும் கொண்டாட வேண்டிய வருடப்பிறப்பு தீபாவளி என்பவற்றை எப்போது கொண்டாடுவதென்று மிகவும் சிரமத்திற்குள்ளாகியுள்ளார் அதேபோல எதிர்வரும் நவராத்திரிவிரதத்திற்கும் மக்கள் எந்நாளில் பூஜையை ஆரம்பிப்பதென்று தெரியாது திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் சோதிடர்கள் தங்களையும் ஏமாற்றி மக்களையும் ஏமாற்றி சைவ சமயத்தின் புனிதத்தையும் கெடுக்கிறார்களென்பது முக்கியமாக இவ்து அவதானிக்கப்படவேண்டும். ஆகவே சோதிடர்கள் ஒன்று கூடி ஒரு பொதுத்தலைமைப் பீடத்தை அமைத்து சைவ மக்களின் அதிருப்தியைப் போக்கி அவர்களைச் சரியான வழியில் நன்னெறிப்படுத்தவேண்டுமென்றும் சைவசமயத்தின் மகத்துவத்தைப் பேணுவதற்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தா.சு.லோகநாதன்
கோவில்வீதி
யாழ்ப்பாணம்.

### நவராத்திரி விரதாரம்பம்

19-9-81-ல் தங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் திரு. க. ச. இளையதம்பி எனபவர் மக்கள் கருத்துப் பகுதியில் வெளிவந்த அறிக்கை எம்மை வருத்தத்துக்குள்ளாக்கியது. ஏனெனில் அவ்வறிக்கையில் குறிப்பிட்டதுபோன்று திரு. இளையதம்பி இலங்கை சோதிட ஆய்வு மன்றக் கூட்டத்திற்கு சமுகமளிக்கவில்லை. நவராத்திரி விரதாரம்பம் பற்றி 6-9-81 லும் 13-9-81லும் ஆராயப்பட்ட இரு கூட்ட வரவு டாப்புகளிலும் அவரின் பெயரோ கை எழுத்தோ இல்லை என்பதை பணிவுடன் அறியத்தருகின்றேன்.

மேலும் அவர் கூறியது போன்று திருக்கணித பஞ்சாங்ககணிதராகிய பிரம்மஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள் மாத்திரம் ஆய்வு கட்டுரைவாசிக்கவில்லை. வேறு பலஅறிஞர்கள் சைவக்குருக்கள்மார் ஆய்வுக் கட்டுரை வாசித்தார்கள். சிலரின் கட்டுரைகள் கடிதமூலமாகவும் கிடைக்கப்பெற்றன.

மேற்படி திரு. இளையதம்பி கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தால் மக்கள் கருத்துப் பகுதியில் வெளியிட்ட கருத்துக்களை ஆய்வு மன்றக்கூட்டத்திலும் சொல்லியிருப்பார். எல்லோருக்கும் தமது கருத்துக்களைக்கூற உரிமையுண்டு. ஆகவே இவர் கூட்டத்திற்கு வரவில்லை என்பது வெளிப்படை.

நவராத்திரி விரதாரம்பம் தீர்க்கமான ஆய்வுக்குப்பின் 29-9-1981 செவ்வாய் அன்றே என்ற முடிவு செய்யப்பட்டது என்பதையும் அறியத் தருகின்றேன்.

கே. என். நவரத்தினம்
உப தலைவர்
இலங்கை சோதிட ஆய்வு மன்றம்.

## ஜனாதிபதியின் பிறந்த தினத்தில்: யாழ்.நகரில் அன்னதானம் ஆஸ்பத்திரியில் ரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் 75வது பிறந்த தினத்தையொட்டி வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள மூன்று அனாதை இல்லங்களுக்கு இருநூறு மதியபோசன உணவுப் பார்சல்களை வழங்கினார்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர் திரு. எஸ் கனகரத்தினம் ஒழுங்கு செய்யப்பட்ட இலவச உணவுபார்சல்கள் கைதடி சைவ அனாதை இல்லம், சொழும்புத்துறை, அனாதை இல்லம், பண்ணை அனாதை இல்லம் ஆகியவற்றில் உள்ள அனாதைப்பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டது.

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் ஏழு சாலைகளிலும் உள்ள ஊழியர்கள் உத்தியோகத்தர்களினால் சேர்க்கப்பட்டு கையளிக்கப்பட்ட பணம் மூலமே இந்த உணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

இந்த விழாவை யொட்டி சபைத்தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் பிராந்திய சபையின் ஊழியர்களை இரத்த தானம் செய்யும்படியும் வேண்டுகோள் விடுத்திருந்தார். இதனுடன் சபையின் சார்பில் ஜனாதிபதிக்கு ஆசிகூறி தந்தியொன்றையும் அவர் அனுப்பினார்.

ஜனாதிபதியின் பிறந்தநாள் வைபவத்தையொட்டி வடபிராந்திய போக்குவரத்துச்

[8-ம் பக்கம் பார்க்க]

## ''அன்பு செலுத்துவதில் வவனியா மக்கள் பின் தங்கியவரல்ல''

### மன்னார் ஆயர் வரவேற்பில் வவனியா எம். பி.

(வவனியா)

''இம்மறை மாவட்டத்தின் மக்களுக்காக சேவையாற்றப் புகுந்த வேளையில் அனைத்தும் நற்செய்திக்கே என்ற விருது வாக்கியத்தைத் தெரிவு செய்தேன்.''

இவ்வாறு தமக்களிக்கப்பட்ட கோலாகல வரவேற்பின் பின் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெற்ற கூட்டுத் திருப்பலியின்போது மக்களுக்கு விடுத்த செய்தியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்,

''நற்செய்தி என்ற விருது வாக்கியத்தினடிப்படையில் உயிர், பொருள், ஆவி அனைத்துடனும் எம்மை அர்ப்பணிக்கின்றோம். இந்த நற்செய்தியானது அன்பின் செய்தியாகும்; ஒற்றுமையின் செய்தியாகும். சமாதானமும் அமைதியும் மக்களிடையே நிலவும். நற்செய்தி மக்களிடையே சென்றடைய உழைப்பதற்காக உறுதி பூணுவோம்'' என்றார்.

ஆயரை வரவேற்றுப் பேசிய வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசுகையில், இம்மாவட்டத்தின் நாலாயிரம் கத்தோலிக்க மக்களின் ஆயரல்ல, இம்மாவட்டத்தின் அனைத்து மக்களினதும் நல்லாயராக வருகைதந்துள்ள ஆயரை வரவேற்பதாகக் கூறினார்.

'கல்வி, வாழ்க்கை வசதி போன்றவற்றில் பின்தங்கியவர்களாக நாம் இருந்தாலும் அன்பு செலுத்துவதிலும் ஒற்றுமையாக இருப்பதிலும் பின்தங்கியவர்களல்ல என்பதை ஆயரின் வருகை உணர்த்தியுள்ளது' என்று எம். பி. தெரிவித்தார்.

ஆயரை வரவேற்று வவனியா நகரசபைத் தலைவர் திரு. ஐ. கேதீஸ்வரன், வவனியா அபிவிருத்தி சபைத் தலைவர் திரு மு சிற்றம்பலம் அருட்திரு ஜே. பி. தேவராசா மற்றும் பலரும் உரையாற்றினார்கள். மன்னார் ஆயரின் வருகையையொட்டி 'அனைத்தும் நற்செய்திக்கே' என்ற வாசகத்தை தெளிவுபடுத்தும் கண்காட்சியும், புனித அந்தோனியார் பாலர் பாடசாலையில் திறந்துவைக்கப்பட்டது. (கு)

## 30-ம் திகதிவரை வேலைக்குத்திரும்பார்

(யாழ்ப்பாணம்)

எம்பிலிப்பிட்டிய ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையில் கடமையாற்றிய சுமார் 50 ஊழியர்கள் இம்மாதம் 30ம் திகதிவரை தாங்கள் வேலைக்குத் திரும்புவதில்லை என்று முடிவு செய்துள்ளனர்.

[8ம் பக்கம் பார்க்க]

# எம்.ஜி. ஆருக்கு எதிராக இந்திராவிடம் புகார்

## மதுபானவரியாக பெரும்பணம் வசூலித்தாராம்

புதுடில்லி, செப் 19

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் மதுபானவரியாக பெரும் தொகைப் பணம் வசூலித்ததாகவும் இதுபற்றி விசாரிக்க வேண்டுமென்றும் திருமதி இந்திராகாந்தியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி. மு. க. இந்திரா காங்கிரஸ், முஸ்லிம்லீக் ஆகிய கட்சிகளைச்சேர்ந்த 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 30 சட்டமன்ற உறுப்பினர்களும் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தியை நேற்று புதுடில்லியில் சந்தித்து மேற்படி விஷயமாக தனித்தனியாக மகஜர்களைக் கையளித்தனர்.

மதுபானவரியாக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி. ராமச்சந்திரன் பெரும் தொகைப்பணத்தை வசூலித்திருப்பது தொடர்பாக விசாரணையொன்று நடத்தப்பட வேண்டுமென்றும் இச்சந்திப்பின்போது இவர்கள் பிரதம மந்திரி இந்திராகாந்தியிடம் வற்புறுத்தினர். (வெ)

### இந்தியாவில்

## 20 அம்ச பொருளாதாரத் திட்டத்துக்கு முக்கியத்துவம்

### மாநிலங்களுக்கு இந்திரா வலியுறுத்து

புதுடில்லி, செப் 19

"மத்திய அரசின் இருபது அம்ச பொருளாதாரத்திட்டத்தை செயல்படுத்தவேண்டும் இதுதொடர்பாக எல்லா மாநிலங்களிலுமுள்ள எமது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பையும் கோருகிறேன்"

இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி புதுடில்லியில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது.

"கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பாவனையாளர்களின் உணவுவிநியோகத்தை மேற்கொள்ள வேண்டும். இது கள்ளச்சந்தைக்காரர்களை ஒழித்துக்கட்ட வழிவகுக்கும்.

"நெருக்கடி நிலையின்போது லஞ்சஊழல்களை அகற்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது. அத்திட்டங்கள் நல்ல பலனை அளித்துள்ளது" என்றார். (வெ)

## மத்திய கிழக்கு சமாதானம்: சவூதி முட்டுக்கட்டை

### அமெரிக்க காங்கிரஸ் குற்றச்சாட்டு

வாஷிங்டன், செப் 19

மத்தியகிழக்குசமாதானத்திற்கு சவூதிஅரேபியா முட்டுக்கட்டையாக இருந்துவருவதினாலேயே அந்நாட்டிற்கு 'ரேடர்' விமானங்களை வழங்குவதற்கு அமெரிக்க காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளதென்று அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு அலெக்சாண்டர்ஹெய்க் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக றீகன் நிர்வாகம் சவூதிஅரேபியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சவூதிஅரேபியாவிற்கு நவீன 'ரேடர்' விமானங்களை வழங்குவதென்று றீகன் நிர்வாகம் முன்பு தீர்மானித்திருந்தது தெரிந்ததே. (வெ)

## 'வன்செயல்புரிவோரை மக்கள் கண்டுபிடிக்க வேண்டும்'

### எம். ஜி. ஆர். கோரிக்கை

சென்னை செப். 19

"பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்துபவர்களையும், பஸ்களைக் கொளுத்துவது போன்ற வன்செயல்களில் ஈடுபடுபவர்களையும் மக்கள் கண்டுபிடிக்க வேண்டும்".

மேற்கண்டவாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் சென்னையில் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது!

"இத்தகைய தீயசெயல்களில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடிக்கப் பொலிசாருக்குப் பொதுமக்கள் உதவவேண்டும். இத்தகைய செயல்கள் மன்னிக்க முடியாத குற்றமாகுமென்றும் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார். (வெ)

## நவீன ஆயுதம் எம்.பி.க்கள் கவலை

புதுடில்லி, செப் 18

பாகிஸ்தானுக்கு நவீனயுத்த ஆயுதங்களை அமெரிக்கா வழங்கவிருப்பது குறித்து இந்திய எம். பி. க்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவிற்கு இராணுவத்தளங்களை அமைப்பதற்கு பாகிஸ்தான் தனது பிராந்தியத்தில் அனுமதி வழங்க முன்வந்திருப்பது குறித்து, இந்தியா எச்சரிக்கையுடன் இருந்துவருவதாக வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

## 'எம். எஸ்.' ஆஸ்தான பாடகர்

புதுடில்லி, செப் 19

பிரபல கர்நாடக இசை மேதை திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஆந்திரப் பிரதேசத்தின் ஆஸ்தானப் பாடகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் திரு ராமமூர்த்தி இதனைத் தெரிவித்தார். ஆந்திராவில் திருமதி சுப்புலக்ஷ்மியின் இசை நிகழ்ச்சியொன்றின் போது இதுபற்றி அறிவிக்கப்பட்டது (வெ)

## பிரான்ஸில் மரண தண்டனை ரத்து

பாரிஸ், செப். 19

பிரான்ஸில் தேசியப் பேரவை மரண தண்டனையை ஒழிக்கும் பொருட்டு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. பிரெஞ்சுப் புரட்சிக் காலத்தில் இருந்து பிரான்ஸில் மரண தண்டனை அமுலிலிருந்து வந்தது

## ஆர். எஸ். எஸ் இயக்க பயிற்சிக்கு தடை

புதுடில்லி செப். 19

ஆர். எஸ் எஸ் இயக்கம் உடற்பயிற்சி நடத்திவருவதை எல்லா மாநிலங்களிலும் தடை செய்யுமாறு மத்திய அரசு வேண்டியுள்ளது

பாடசாலைகளிலும், பகிரங்க இடங்களிலும் இவ்வியக்கத்தினர் நடத்திவரும் உடற்பயிற்சி வகுப்புகளைத் தடைசெய்யுமாறும் மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுள்ளது. (வெ)

## கூட்டம், ஊர்வலம் நடத்தத்தடை

சென்னை செப் 19

மதுரை நகரில் முன்னறிவித்தல் பெறாமல் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு நேற்றுமுதல் ஒருமாதகாலத்திற்குள் தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளது (வெ)

## இ.த.ஆ.சங்க பதில்செயலாளர்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பதில் பொதுச்செயலாளராக திரு. த. பஞ்சலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுச்செயலாளர் திரு. த. மகாலிங்கம் வெளிநாடு செல்வதால், பொதுச் செயலாளரின் கடமைகளை அவர் நாடு திரும்பும்வரை கவனிக்கும் பொருட்டு, சங்கத்தின் செயற்குழு இந்நியமனத்தைச் செய்துள்ளது. திரு. த பஞ்சலிங்கம் இ. த ஆ சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளராக கடந்த இரு வருடங்களாக கடமையாற்றி வருகின்றார்.

## பஸ்ஸிற்கு மாணவர் தீவைத்தனர்

சென்னை செப். 19

சென்னையில் பஸ் நடத்துனரொருவருக்கும் மாணவர்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறையடுத்து மாணவர்கள் பஸ்ஸிற்குத் தீ வைத்ததாக அறிவிக்கப்பட்டது

இந்தப் பஸ்ஸின் இருக்கைகள் யாவும் தீக்கிரையாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வெ)

### 1944ம் ஆண்டு கடலில்

## மூழ்கிய கப்பலிலிருந்து தங்கம் மீட்பு

(லண்டன்)

இங்கிலாந்து சுழியோடிகள் 278 தங்கப்பாளங்களை நோர்வே நாட்டிற்கு அருகாமையில் மூழ்கியிருக்கும் தம் நாட்டுக் கப்பலிலிருந்து மீட்டுள்ளனர்.

1944ம் ஆண்டில் சோவியத் நாட்டிலிருந்து பிரிட்டன் நோக்கிவந்த இப் போர்க் கப்பல் பல பெறுமதிமிக்க தங்கப்பாளங்களுடன் நோர்வே நாட்டுக் கடலில் மூழ்கியது.

பிரிட்டன் சுழியோடிகளால் மீட்கப்பட்டுள்ள இத்தங்கப் பாளங்களின் பெறுமதி 80 கோடி அமெரிக்கன் டாலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. சுழியோடிகள் தாம் மேலும் 5.5 தொன் நிறையுள்ள தங்கப்பாளங்களை இக்கப்பலிலிருந்து மீட்கவிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்டுள்ள தங்கத்தில் மூன்றில் இரண்டுபங்கு ரஷ்யாவிற்கும் மூன்றில் ஒரு பங்கு பிரிட்டனுக்கும் சேருமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை பிரிட்டன் வர்த்தகத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஜ)

## அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்டன், செப் 19

போலந்தின் உள்நாட்டு விவகாரத்தில் சோவியத்யூனியன் தலையிட்டுவருவதாக அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது. (வெ)

### யாழ். மாவட்ட

## பாவனையாளர் சங்கங்களும் ஆலோசனை வழங்கியுள்ளன

(மாவிட்டபுரம்)

பாவனையாளர் சங்கங்களது செயற்பாடுகள், அதிகாரங்கள் பற்றி ஆராய நியமிக்கப்பட்டுள்ள குழுவுக்கு யாழ். மாவட்ட பாவனையாளர் சங்கங்களும் தத்தமது ஆலோசனைகளை வழங்கியுள்ளன.

நாடு பூராவிலும் பாவனையாளர் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட பாவனையாளர் சங்கங்கள் சிறப்பான முறையில் இயங்காமையால் அவற்றின் செயற்பாடுகள் அவற்றுக்கு வழங்கக்கூடிய அதிகாரங்கள் பற்றி ஆராய பிரதி வர்த்தக கப்பல்துறை அமைச்சர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது

இக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காகயாழ் மாவட்டத்திலுள்ள பாவனையாளர் சங்கங்களிடம் அவற்றின் ஆலோசனைகளை யாழ். உதவி உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு கோரியிருந்தார்.

இதற்கிணங்க யாழ். மாவட்டத்திலுள்ள பாவனையாளர் சங்கங்கள் தமது ஆலோசனைகளை வழங்கியுள்ளன.

இச்சங்கங்கள் செயற்படுவதிலுள்ள கஷ்டங்கள் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் இவற்றுக்கு வழங்கப்படவேண்டிய அதிகாரங்கள் பற்றியெல்லாம் இந்தஆலோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதைவஸ்து கடத்தியவர் பொலிஸில்

(கொழும்பு)

ஈரானிலிருந்து நாடு திரும்பிய இலங்கையர் ஒருவர் போதைவஸ்து கடத்த முற்பட்டபோது கட்டுநாயக்கா விமானநிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டார்.

இவரில் சந்தேகம்கொண்ட உதவி சுங்க சேகரிப்பாளர் திரு. நவரட்ண செனரத் இவரை சோதனையிடும்படி உத்தியோகத்தர்களிடம்பணித்தபோது பிரயாண பாக்கின் அடியில் போதைவஸ்து மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. ரூபா 75,000 அபராதம் விதிக்கப்பட்டது இவர் அபராதத்தைக் கட்டத் தவறியமையால் கட்டுநாயக்கா விமான நிலையப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (குவெ)

## சைக்கிள் திருட்டு: எதிரி குற்றத்தை ஏற்ருர்

(மாவிட்டபுரம்)

சைக்கிள் திருட்டு வழக்கொன்றில் குற்றத்தை ஏற்ற எதிரிக்குத்தண்டனை வழங்குவது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

காங்கேசன்துறை சந்திக்கருகாமையில் கடையொன்றின் முன்நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றை திருடியது தொடர்பாக செல்லையா கணேசனின் முறைப்பாட்டின் பேரில் காங்கேசன்துறை பொலிசார் விசாரணை செய்தனர்.

இதுகுறித்து எஸ் செல்லத்துரை ஏற்கனவே கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார் பின்னர் முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பைச் சேர்ந்த சிங்கராசா ஆனந்தராசா என்னும் நபர் கைதாகி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார்

அச்சமயம் இந்த இரண்டாவது சந்தேக நபர் சைக்கிள் திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்டதால் முதலாவது நபர் விடுதலை செய்யப்பட்டு இவருக்கு தண்டனை வழங்குவது இம்மாதம் 28ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது. (அ)

## மா. அ. சபைத் தலைவருடன் பேச்சுவார்த்தை

(மாவிட்டபுரம்)

சனசமூக நிலையங்களுக்கு உதவி ஒத்தாசைகள் அளிப்பது தொடர்பாக யாழ். அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசாவுடன் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் இம்மாதம் 24ம் திகதி கலந்துரையாடவுள்ளது.

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் குறைபாடுகள் குறித்து யாழ். அபிவிருத்தி சபைக்கு இவ் ஒன்றியம் மகஜர் ஒன்றை சமர்ப்பித்து இதுகுறித்து நேரில் கலந்து பேச சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறும் கோரியிருந்தது.

இதனையடுத்து இம்மாதம் 24ம் திகதி இக்கலந்துரையாடலை நடத்த ஏற்பாடு செய்து, யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்திற்கு அபிவிருத்தி சபைத் தலைவரால் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்களது நன்கொடைப் பணம் அதிகரிப்பது கிராமோதய பிரதேச சபைகளில் சனசமூக நிலைய உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளித்தல், கிராமரீதியில் பாதுகாப்பு குழுக்களை அமைத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது

# இலங்கை வங்கி

# தேசிய அறக்கொடை

## (பருவமடையாதோர், வயதுவந்தோர்) திட்டம்

பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் உயர் கல்விக்கோ அல்லது அவர்களுக்கு சீதனமாக வழங்கவோ அல்லது இரண்டிற்குமோ வழிசெய்வதற்கென விசேடமாக உருவாக்கப்பட்டது இத்திட்டம், வயது வந்தவர்களும் தங்கள் எதிர்காலப் பாதுகாப்புக்கு வேண்டிய நிதியை இத்திட்டத்தின்மூலம்பெற்றுக்கொள்ளலாம்.

### வயதெல்லை கிடையாது

16 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தேசிய அறக் கொடைக் கணக்குகளை ஆரம்பிக்கலாம். உயர்மட்ட வயதெல்லை கிடையாது.

பருவமடையாதவர்களின் பெயர்களில் அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கணக்குகளை ஆரம்பிக்கலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கணக்குகளை வைத்திருக்கலாம்,

### அறிமுகம் தேவையில்லை

கணக்கினை ஆரம்பிக்கும் போது அறிமுகஞ்செய்தலோ, சாட்சிகளோ, ஆளடையாள அட்டைகளோ வேண்டியதில்லை. ஆனால், கணக்கு முதிர்ச்சி அடைந்து பணத்தினைப் பெறும் போது தகுந்த அடையாளமறிந்த பின்னரே பணம் கொடுக்கப்படும்.

### வைப்புச் சான்றிதழ்

தேசிய அறக்கொடைக் கணக்குகளில் வைப்புச் செய்யும் பணத்திற்கான ஒரு வைப்புச் சான்றிதழை கணக்கு வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் பெறுவார்.

### மாதாந்தக் கட்டுப்பணம்

600 ரூபாவுடன் அல்லது அதன் பெருக்கங்களில் தேசிய அறக்கொடைக் கணக்குகளை ஆரம்பிக்கலாம். இத்தொகையினை 21 தொடர்ச்சியான மாதாந்தத் தவணைகளில் செலுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, 600 ரூபாவை 25 ரூபா கொண்ட 21 மாதாந்தத் தவணைகளில் வைப்புச் செய்யலாம். அப்படிச் செலுத்தும் போது நீங்கள் வைப்புச் செய்யும் மொத்தப் பணம் 525 ரூபாவாகும். மிகுதி 75 ரூபாவும், வைப்பினைச் செய்து முடிப்பதற்கு எடுக்கப்படும் 21 மாதகாலத்தில் சேரும் வட்டி மூலம் நிரப்பப்படும்,

### முதிர்ச்சி

ஒரே முறையில் பணம் முழுவதையும் செலுத்தி ஆரம்பிக்கப்படும் தேசிய அறக்கொடைக் கணக்குகள், அவை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 21 வருட காலத்தில் முதிர்ச்சியடையும், தவணைமுறை வைப்புத் திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்படும் கணக்குகள், 21 வது தவணைப் பணம் செலுத்திய திகதியிலிருந்தே முதிர்ச்சியடையும். (முதிர்ச்சியடைந்த பின்னர் கிடைக்கும் பணம், தவணை முறைத் திட்டம் ஆகியன பற்றிய விபரங்களுக்கு அட்டவணை 1 ஐப் பாருங்கள்),

### முன்கூட்டிய முதிர்ச்சி

தேசிய அறக்கொடைக் கணக்குகளை வைத்திருப்போர் அவர்களின் கணக்குகள் முதிர்ச்சியடையும் காலத்தை எத்தனை ஆண்டுகளாலும் குறைத்துக் கொள்ளலாம். அதற்குரிய தொகைப் பணத்தை அவர்கள் செலுத்தவேண்டும். உதாரணமாக, ரூ. 11,845/25 ஐ ஒரே முறையில் வைப்புச் செய்வதன் மூலம் 600 ரூபா கொண்ட கணக்கின் முதிர்ச்சிக் காலத்தை 15 வருடங்களால் குறைத்துக் கொள்ளலாம். இதனால் கணக்கு வைத்திருப்பவர் 6 வருடங்களில் முதிர்ச்சிக்கால நன்மைகளை அனுபவிப்பார்.

(விபரங்களுக்கு அட்டவணை 2 ஐப் பாருங்கள்)

### மீளப் பெறுதல்

வயது வந்தவர்கள், விரும்பினால், கணக்கு ஆரம்பித்த திகதியிலிருந்து 2 வருடங்களின் பின்னர் விரும்பிய நேரத்தில் திட்டத்திலிருந்து விலகிக் கொள்ளலாம். அவர்கள் வைப்புச் செய்த தொகையையும் அத்துடன் சேர்ந்த வட்டிப்பணத்தையும் மீளப்பெறலாம்.

### ஒய்வூதியக் கணக்குகள்

பருவமடையாதோர், அவர்களின் 16 வது 17 வது பிறந்த திகதிகளுக்கிடையிலான அந்த ஒருவருடகாலம் பகுதியில் தங்கள் தேசிய அறக்கொடைக் கணக்குகளை இலங்கை வங்கியின் தேசிய ஒய்வூதியக் கணக்குகளாக மாற்றலாம். 17வது பிறந்த திகதிக்குப் பின்னர் இதனைச் செய்ய முடியாது.

### மேலதிகக் கொடுப்பனவு

வைப்புச் செய்பவர் ஒருவர், முதிர்ச்சியடைந்த பின்னர் அப்பணத்தை வங்கியில் விட்டுவைப்பதன் மூலம் அவர்ச்சியான ஒரு மேலதிகத் தொகை பணத்தை மாதாந்தம் பெறமுடியும். முதிர்ச்சியடைந்த அத்தொகை பணத்தை அவர் மீளப்பெறும் வரை, இந்த மாதாந்த மேலதிகக் கொடுப்பனவு நீடிக்கும். இது முதிர்ச்சிக்காலப் பணத் தொகையை எந்த விதத்திலும் பாதிக்காது. அவர் விரும்பிய நேரத்தில், எந்த விதக் கழிவுமின்றி முழுமையாக மீளப்பெறலாம்.

(மாதாந்த மேலதிகக் கொடுப்பனவு பற்றிய விபரங்களுக்கு அட்டவணை 1 ஐப் பாருங்கள்),

### மாதாந்த வருமானம்

இந்த ஏற்பாடு, ஓய்வுபெறும் காலத்தை நெருங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு அவர்கள் தொழில் புரியாமல் இருக்கும் காலத்தில் கிரமமான மாதாந்த வருமானத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. அவர்கள் தங்கள் இலாப்பாறல் மூலம் பணிக் கொடையாகப் பெறும் பணத்தை வைப்புச் செய்து, கணக்குகள் முன்கூட்டியே முதிர்ச்சியடைவதற்குச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பயன்படுத்தி கிரம மாதாந்த வருமானத்தைப் பெற வழிசெய்யலாம்.

### வட்டி வீதங்கள்

கொடுப்பனவுகள் வட்டி வீத மாற்றங்களுக்கமைய மாறுபடும்.

### அட்டவணை 2

ஒரு600ரூபா தேசிய அறக்கொடைக் கணக்கு முன்கூட்டியே முதிர்ச்சியடையவதற்குச் செலுத்தவேண்டிய தொகைப் பணம்.

| முதிர்ச்சி வருடங்களில் | தொகை |
|---|---|
| 20 | ரூ. 732-00 |
| 19 | ரூ. 893-00 |
| 18 | ரூ. 1,089-50 |
| 17 | ரூ. 1,329-00 |
| 16 | ரூ. 1,621-50 |
| 15 | ரூ. 1,978-25 |
| 14 | ரூ. 2,413-50 |
| 13 | ரூ. 2,944-50 |
| 12 | ரூ. 3,592-25 |
| 11 | ரூ. 4,382-75 |
| 10 | ரூ. 5,346-75 |
| 9 | ரூ. 6,523-25 |
| 8 | ரூ. 7,958-25 |
| 7 | ரூ. 9,709-25 |
| 6 | ரூ. 11,845-25 |
| 5 | ரூ. 14,451-25 |
| 4 | ரூ. 17,630-50 |
| 3 | ரூ. 21,509-25 |
| 2 | ரூ. 26,241-25 |
| 1 | ரூ. 32,014-50 |

### அட்டவணை 1

| | வைப்புத்தொகைகளும் முதிர்ச்சியடையும்போது கிடைக்கும் தொகைகளும் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| ஒரே முறையில் செலுத்துதல் அல்லது 21 மாதாந்தத் தவணைகள் | 600 | 1,200 | 2,400 | 4,800 | 9,600 | 12,000 | 15,600 | 18,000 |
| | 25 (525) | 50 (1,050) | 100 (2,100) | 200 (4,200) | 400 (8,400) | 500 (10,500) | 650 (13,650) | 750 (15,750) |
| 21 வருடமுடிவில் கிடைக்கும் தொகை | 39,057 | 78,115 | 1,56,231 | 3,12,462 | 6,24,924 | 7,81,155 | 10,15,501 | 11,71,732 |
| மாதாந்தம் கிடைக்கும் மேலதிகத் தொகை | 600 | 1,200 | 2,400 | 4,800 | 9,600 | 12,000 | 15,600 | 18,000 |

# 'ஸ்டூரியோ' முறை

## ஒலிபரப்புக்கு வரவேற்பு

(தொழும்பு)

இலங்கை ஒலிபரப்புச் சேவை "ஸ்டூரியோ" முறையில் ஒலிபரப்புவதற்கான ஆழுத்துக்கள் தற்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தாரால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

"ஸ்டூரியோ" முறையிலான ஒலிபரப்பை வரவேற்று அநேக வாலெலி நேயர்கள் தமது ஆதரவுகளையும், விரும்பங்களையும் தெரிவித்து வருவதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தாம் தற்சமயம் தமிழ்ச் சேவை "ஸ்டூரியோ" முறையில் ஒலிபரப்பப்படுவதாகவும் இதற்கு வரவேற்பளிக்கும் விதத்தில் அநேக நேயர்கள் ஸ்டூரியோ முறையில் பதிவு செய்யப்பட ஒலிப்பதிவு நாடாக்களை (கசெற்) "ஸ்டூரியோ" ஒலிபரப்பிற்கு பொறுப்பான பொறியியலாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார். (இ)

## கான்ஸ்டபிள் மரணம்

(ரூபன)

ரூபன புகையிரத நிலையத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ரயிலினால் மோதுண்டு மரணமானார்.

ரூபன பொலிஸ் நிலையத்தில் கடமைபுரியும் கே. எம். டபிள்யு. பெரேரா என்ற கான்ஸ்டபிளே மேற்படி பரிதாபமரணத்திற்குட்படிடவராவார். கடமை முடித்துவிட்டு ரயில் நிலையம் வந்த இக் கான்ஸ்டபிள் பி. ப. 3.40 வண்டியில் ரூபன புகையிரத நிலையத்திற்கு வந்த 'ரஜரட்டரஜனி' என்ற மேற்படி எடுகெப்புகையிரதத்தில் மோதலுக்கே இலக்காகினார்.

ஜாஎலப் பகுதியைச்சேர்ந்த கான்ஸ்டபிள் பெரேரா நான்கு பிள்ளைகளின் தந்தை எனத் தெரிவிக்கப்பட்டது. (இ)

# பரீட்சை முடிவுகள்

## இந்தவாரம் வெளிவரும்

(தொழும்பு)

கடந்த ஏப்பரல் மாதம் நடைபெற்ற க. பொ. த. (உயர்தரம்) பழைய இடைக்கால பாடத்திட்டத்திலும் புதிய பரீட்சை முடிவுகள் இவ் வாரத்தில் வெளியிடப்படவுள்ளன.

இடைக்கால பாடத்திட்டப் பரீட்சை முடிவுகள் வர ஆரம்பத்திலும் புதிய பாடத்திட்ட முடிவுகள் வர இறுதியிலும் வெளிவரவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லாத்தீர்மானங்களும் மேற்படி பரீட்சை முடிவுகளை டரீட் சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கத் தொடங்கியுள்ளது.

இவ்வருடாந்தப் பரீட்சைகளில் இடைக்கால பாடத்திட்டத்தில் 45,000 பரீட்சார்த்திகளும் புதிய பாடத்திட்டத்தில் 42,000 பரீட்சார்த்திகளும் தோற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

### வானியற்கழக கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வானியற்கழகத்தின் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு கழகத்தலைவர் சட்டத்தரணி திரு. டபிள்யு. எஸ். செந்திநாதனின் தலைமையில் நடைபெறவுள்ளது.

# சின்னஞ் சிறிசுகள் நெஸ்பிறேயில் செழித்து வளர்கிறார்கள்

உங்கள் செல்வக் குழந்தைகளின் பிள்ளைப் பராயத்தை மகிழ்ச்சிகரமாக்குங்கள். வளரும் பருவத்தில் ஆரோக்கியம் தரும் சத்து மிக்க, இறீம் சுவையுள்ள நெஸ்பிறேயில் அவர்களை வளருங்கள்.

நெஸ்பிறே 28% பால் கொழுப்பும், 'ஏ','டி' விட்டமின் சத்துகளும் கொண்டது. தகரத்தில் அல்லது காற்றுப் புகா உலோகப் பையில் பக்குவமாக அடைக்கப்பட்டு சுத்தமாகவும் சுவை குன்றாமலும் கிடைக்கிறது. இன்றே வாங்குங்கள்.

## நெஸ்பிறே

வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.




400 கிராம்.
ரூ. 22/50

ஒரு கிலோ
ரூ. 78/75

Nestlé
ஒரு நெஸ்லே தயாரிப்பு

Grant, K & E 4024

**வெலிங்டன்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சி
வெகுமாரி - லட்சுமி
**அவன்-அவள்**
அது (ஈஸ்ட்மன்கலர்)

**மிலோ** யாழ்நகர்
தினசரி 4 காட்சிகள்
**ஆலாவுதினும் அற்புதவிளக்கும்**

**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15 & 9-45
தமிழகத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி
வெள்ளிவிழா கொண்டாடிய வெற்றிச் சித்திரம்:
காதல் இளவரசன் — விழி அழகி
**கமலஹாசன் — ஸ்ரீ தேவி**
முத்துராமன், சுந்தரராஜன், நம்பியார்
வெண்நிற ஆடை நிர்மலா, பண்டரிபாய்
**குரு**
இசை: இளையராஜா
—ஈஸ்ட்மன் வண்ணத் திரை ஓவியம்—

(யாழ்ப்பாணம்)
**ராஜா** தினசரி 10-30, 2-15, 6-15, 9 30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா - நாகேஷ்
**ராமன் தேடிய சீதை**
(சுமன் கலர்—புதிய பிரதி
22-9-81 முதல் 'ஆலயமணி'

சற்றுத எம். ஜி. ஆர். சாமினியில் அதிபுத நடிப்பைக் காண இன்னும் சில நிமிடங்களே மீதம்.!
**மின்ஸர்** தினசரி 4 காட்சிகள்
★ சாமினி ★ ஸ்ரீபிரியா ★ ராதாகிருஷ்ணா
**நீலக்கடலின் ஓரத்திலே**
(ஈஸ்ட்மன் கலர்)
From 25th Sept '81 SEAN CONNERY in
**Wind and the Lion**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ஜெமினி - முத்துராமன் - எம். ஆர். ராதா
கே. ஆர். விஜயா — சாவித்திரி — மனோரமா
நடித்த
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி
**கற்பகம்**

**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ கதாகர் ★ மாலினிராத் ★ சுமதி
மற்றும் பலர் நடித்த
**குரல் இல்லாத சித்திரங்கள்**

5-வது வாரம்
**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-30, 6-15, 9 30
(யாழ் நகர்)
மஞ்சுபார்கவி — ஜெயசித்ரா
**சங்கராபரணம்** (கலர்)

**REGAL** நீகல் DAILY 5 SHOWS இன்று மட்டும்
**FIST OF FURY**
21 தினங்கள் முதல்
**"ஜங்கிள் புக்"**
காட்சி நேரம்: 10-30, 2-15, 4-45, 7-00, 9-30
A SWINGING SAFARI OF LAUGHS!
Walt Disney Presents
**The Jungle Book**
An all cartoon feature
TECHNICOLOR®

© 1967 Walt Disney Productions
21 முதல் 27 வரையும் காண்பிக்கப்படும் பாடசாலைகள் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ள தொலைபேசி இல. 360 தொடர்புகொள்க.




(குறுநாவல் தொகுதி)
வெளியீடு: பூர்கூடப் பதிப்பகம்.
த. பெ. இல: 501.
பார்க்டவுன்,
சென்னை 600003

செ. யோகநாதன் எழுதிய 'கனவுகள் ஆயிரம்' என்ற குறுநாவல் அழகியமுறையில் புத்தகமாக வெளிவந்துள்ளது. பூர்கூடப் பதிப்பகத்தினரின் முதலாவது நாவலாக 'கனவுகள் ஆயிரம்' வெளியிடப்படுகிறது. செ. யோகநாதனின் புதிய குறுநாவல், இன்றைய எரியும் பிரச்சினையான சுகேபச்சம் குறித்து எழுதப்பட்டுள்ளது. குறுநாவல்களுக்குரிய பரிசே யோகநாதனுக்குள்ள ஆற்றலையும் அவரது பல பட்ட பாத்திரவார்ப்பினையும், 'கனவுகள் ஆயிரம்' மீண்டும் நிரூபித்திருக்கிறது.

இன்றைய இளந்தலைமுறையினரின் கல்விப் பிரச்சினைகள், வேலையில்லாத்திண்டாட்டம், காதல் உணர்வுகள் என்பன பற்றிய வெறுமனே உணர்ச்சி வசப்பட்ட ரீதியில் சித்தரித்துள்ளார். பிரச்சினைகள் தீர்வுநோக்குடன் பதார்த்தபூர்வமாக நோக்கப்படுகின்றன. மனோகர், சுமலா, சேரபாலன், சகுனா, தேவா, வெயாதம், கண்ணன் ஆகிய இளந்தலைமுறையினரின் பாத்திரவார்ப்பு நிஜ வாழ்விலே நாங்கள் சந்திக்கும் இளைஞர்களையும் யுவதிகளையும் நமது கண்முன்னே அப்படியே கொண்டு வருகிறது. தற்போது நிலவுகின்ற பிரச்சினைகளைத் தொட்டுக்காட்டுவதோடு நின்றுவிடாது, அவற்றை மிகமிகத் தீர்வு காணுகின்ற முயற்சியும் இக்குறுநாவலில் ஆசிரியர் சுவைபடவே சாதித்துள்ளார். மிகவும் சரளமான தமிழ்நடை இக்குறுநாவலின் அடுத்த சிறப்பம்சமாகும். விரசமும், வெளிநாடு செல்லும் மன மோகமையும் கொண்ட இளந்தலைமுறையினரின் உள்ளச் சிக்கலையும் உண்மை நிலையையும் கூறும் இக் குறுநாவல் தகுந்த காலத்தில் வெளிவருகின்றது குறிப்பிடத்தக்கது.

— வாசகன்

## ஆசிரியை பற்றி புகார்

(மல்லாகம் நிருபர்)

வேலணைப் பகுதியில் ஒரு வித்தியாலயமோ அதிபர் அடையாளமோ இன்றி ஆசிரிய ஒருவர் மேற்படி வித்தியாலயத்தில் கல்விகற்கும் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களை சாதியின் பெயரைக்கூறி தூற்புறுத்தியதாகவும் பாதிக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் வடபகுதி கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். வேதாதனுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.


**யாழ். நகரில் மலிவுவிலையில் பொருட்கள்...**

★ பேப்பர் வகைகள்
★ மின்சார பொருட்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ வீட்டுப் பாவனைப் பொருட்கள்

ஃ நியூஸ் பிரின்ட் பேப்பர் ஃ பேங் பேப்பர்
(இறக்குமதி, உள்ளூர் செய்யப்பட்டது)
பேங் பேப்பர் கலர்
வைட் பிரின்டிங் (22 1/2x35) (20x30) (D/C)
TISSUE (ரிசு) (வெள்ளை பல வர்ணங்களில்)
GRAPE PAPER (பச்சை, கிறப்புடன், 10 வர்ணங்களில்)
ஃ பிறவுண் பேப்பர் ஃ டைப்பிங் பேப்பர்
கடித உறைகள் (பல அளவுகளில்)
பிளாஸ்டிக் குரோசரி பேக்ஸ் & (WEDDING BAG)
Australian Clipsal Switches
அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட இலிப்சல் சுவிச்சுக்கள், சகலவிதமான லகேஜ், வெடிங் பைகள்
மின்சார அலங்காரப் பொருட்கள், மின்விசிறிகள், மின் அலங்காரப் பென்டன்கள், இஸ்திரிப் பெட்டிகள் டோர்ச் லைட்டுகள், பொக்கட் றேடியோக்கள்
கசெட் றேடியோக்கள்
இன்னும் பல பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றிட
**அம்பலவாணர் அன் சன்ஸ்**
தேசிய கடதாசி கூட்டுஸ்தாபனத்தினால் அதிகாரிக்கப்பட்ட வியாபாரிகள்- மிச்சார இணைப்பு ஒப்பந்தகாரரும். விநியோகஸ்தரும்
196 கே. கே. எஸ். வீதி,
(கடைத்தெரு பிள்ளையார் கோயில் எதிரில்)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8291 தந்தி: 'வாணர்சன்ஸ்'
தலைமையகம்:
பேர்ள் லிட்ஸ்
அம்பலவாணர் அன் சன்ஸ்
78, மலிபன் வீதி, கொழும்பு-11 போன்: 24821-28244
லெட்சுமி பவான்
'9ரமிஒமா7 க் லஹெவத்தை, கொழும்பு-11

**கேள்விப்பத்திர விற்பனை**

பின்வரும் வாணிகச் விநியோகம் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன:

1. பெரியகளை சந்தியிலிருந்து 150 யார்களுக்கப்பாலுள்ள 17½ பரப்பு முன்றிலை தோட்ட டிணைக்கும் வாணி.
2. பண்டத்தரிப்புச் சந்தியிலிருந்து 500 யார்களுக்கு அப்பால் பெரியகளை நோக்கிச் செல்கின்ற பாதைக்குறுக்கே உள்ள 10 பரப்பு நெடுவாணி.
3. மாரிகாலக் கூடல் முருகமூர்த்தி கோவிலுக்கு முன்னாலுள்ள அதிகாரமிடப்பட்ட 6 பரப்புக் வாணி.
4. மல்லாகம் சிகரெட் புகையிலைச் சங்கத்திலிருந்து சம்பத்துவரைக்குப் போகும் பாதையில் 100 யார்களுக்கு அப்பால் உள்ள 3½ பரப்பு தோட்டக்காணியும் டிணைகளும்.

மேற்படி வாணிகள் பற்றிய தகவல்களை அதற்கான நிபந்தனைகள் விண்ணப்பப் படிவங்கள் யாவும் பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பம் கையளிக்க முடிவுத் திகதி: 06-10-1981 காலை 10-00 மணி வரை
கேள்விப் பத்திர முடிவுத் திகதி: 07-10-1981 காலை 10-00 மணி வரை

பொதுமுகாமையாளர்,
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

13-09-1981. (0983

எம்மிடம்.....
இறக்குமதி செய்யப்பட்ட
ரெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சீற்
பொலித்தீன் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெறலாம்.
H.ESMAILJEE&Co
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

# படம் காட்டியதில் நட்டம் இளைஞர் தற்கொலை?

[மாவிட்டபுரம்]

வீடியோ படம்காட்டி நஷ்ட மடைந்த 19 வயது வாலிபர் ஒருவர் நஞ்சருந்தி மரணமானார்

அளவெட்டி தெற்கு வாகியான வைரவநாதன் ஜெகதீஸ்வரன் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை ஊழியரான இவர் தமது கிராமத்தில் வீடியோக்காட்சி படம்ஒன்றை ஒழுங்கு செய்து காண்பித்தாரென்றும், இதனால் நஷ்டமேற்பட்டதால் தமது சம்பளத்திலிருந்து ஒரு பகுதியை எடுத்தாரென்றும், மிகுதி குடும்பச் செலவுக்கு போதாதென்று தாயார் கூறியதாகவும், பின் தாயாரின் தோடுகளை வாங்கிச் சென்று அடைவு வைத்து பணம் பெற்றுவந்து தாயிடம் கொடுத்தாரெனவும் இவர் தாயாரின் முன்னிலையிலே நஞ்சருந்தினரென்றும் விசாரணையில் தெரியவந்தது.

மரணவிசாரணை அதிகாரி திரு.நா. தம்பிராசா விசாரணை நடத்தி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். [வெ]

யாழ். நகரில்
கொழும்பு விலைகளுக்கமைய
இரும்புக்கம்பிகள்,
3/8, 5/8, 1/2''
கூரைத்தகடுகள், நீர்இறைக்கும்
மோட்டர்கள்
பெறுவதற்கு நாடுங்கள்
நேரடி இறக்குமதியாளர்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1-2, மொம்சாக் பில்டிங்
ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்

கல்வித்துறையிலிருப்பவர்களுக்கு

# நிர்வாக அறிவும் இருக்கவேண்டும்

## வடமாநில கல்விப்பணிப்பாளர் விருப்பம்

[உடுப்பிட்டி]

''கல்வித்துறையில் ஈடுபடுபவர்களுக்கு நிர்வாக அறிவும் ஆற்றலும் இருக்கவேண்டியது மிகமிக அவசியமாகும்'' என்று வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. கே. சிவநாதன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடாத்திய கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. ஆ. க. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில்:- ''ஆசிரியர்கள் புதிய கல்விக் கொள்கைக்கும், புதிய சமுதாய முன்னேற்றத்திற்கும் ஏற்ப அவசியம் உணர்ந்து செயற்பட வேண்டும்.'' என்றார் [கு]

## யாழ்.நகரில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் சகல சாலைகளிலும் நண்பகல்பன்னிரண்டு மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன. வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுசனஉறவு உத்தியோகத்தர் திரு. க. தனபால சிங்கம் சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டார்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பிறந்ததினத்தையொட்டி யாழ். அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றும் ஜாதிக சுகாதாரசேவை பொது ஊழியர் சங்க உறுப்பினர்கள் இரத்ததானம் செய்தனர்.

## மந்திகை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காப்புக்குட்படுத்தப்பட்டுள்ள இவரி வாழ். பெரியாஸ்பத்திரிக்கு மாற்றப்படலாம் எனத் தெரிகிறது.

கொலையுண்டவரின் மரணவிசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் நாளை திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது. [மா]

படாது ஒரு மூலையில் கவனிப்பாரற்ற நிலையில் ஒதுக்கப்பட்டிருப்பதை காணக்கூடியதாகவிருக்கிறது.

உற்பத்தியாளர்கள் 'மத்தியஸ்தர்களின்' தராசுகளைப் பாவிப்பதனால் அதிக கூலி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளதாக உற்பத்தியாளர் ஒருவர் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

உடனடியாக இத்தராசைத் திருத்தி உற்பத்தியாளர்களுக்கு வசதியளிக்கவேண்டுமென்றும், சந்தைக்குள் நிலவும் பலவித தொல்லைகளிலிருந்தும், உற்பத்தியாளர்களையும், பாவனையாளர்களையும் காப்பாற்ற யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் மகஜர் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வடபகுதியில் பிரபல சந்தையாக விளங்கும் இச்சந்தையில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் பல இடங்களிலிருந்தும் வியாபாரிகள் உற்பத்திப் பொருள் உற்பத்தியாளர்கள் தங்கள் பொருள்களை சந்தைப்படுத்த வருவது வழக்கம்.

இந்நிலையில் சுகாதாரம் பேணப்படுவதில்லையென்றும் முறையிடப்பட்டுள்ளது. [மா]

## உண்ணாவிரதம் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

எழுதுமட்டுவாழ் கிராமத்தில் அனுமதியையும் சமூக ஒற்றுமையையும் ஏற்படுத்துமுகமாக அறவழிப்போராட்டக் குழு இன்று நடாத்தவிருந்த உண்ணாவிரதத்தினை நாட்டின் அவசரகாலநிலை காரணமாக காலவரையறையின்றிப் பின் போடப்பட்டுள்ளதாகக் குழுவினர் தெரிவித்துள்ளனர். [மா]

## அரசுடன்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அமரர் வன்னியசிங்கத்தின் நினைவுநாளிலே எம்மக்கள் மத்தியில் நிலவும் சில தப்பபிராயங்களுக்கு பதில் கூற வேண்டியது எனது கடமையும் பொறுப்புமாகும்.

''மிகவும் சாதுரியமாக நடந்து தமிழ் ஈழம் என்ற கப்பலை பாறைகளில் மோதவிடாமல் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது. இந்நிலையில் நாம் சில நடவடிக்கைகளை எடுக்கும் போது அது மக்களுக்கு தவறு கப்பட்டாலும் அதுவும் எமது நன்மைக்கே என்பதை அவர்கள் உணரவேண்டும். தவறுன வழியில் உங்களை ஒருபோதும் நாம் இட்டுச் செல்லமாட்டோம். 77ல் இதொகா கூட்டணியிலிருந்து பிரிந்த போது நாம் மோதாமல் கண்ணியமாக நடந்து கொண்டோம். என்மீதான நம்பிக்கையில்லா பிரேரணையில் திரு. தொண்டமான் பேசிய பேச்சு உலக அரங்கில் எவ்வளவுதூரம் சாதகமான நிலையை எமக்கு ஏற்படுத்தித்தந்தது என்பதை நாம் மறுக்க முடியாது.

''அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையிட்டும் பலர் குறைகூறுகிறார்கள். நாம் அரசிடம் சமர்ப்பித்த 5 கோரிக்கைகளில் நான்கு அரசால் ஏற்கப்பட்டுள்ளது. 75 வீத தமிழ்ப் பொலிசாரை தமிழ்ப் பகுதிகளில் நியமிக்கவும், ஊர்காவல் குழுக்களை அமைக்கவும், அரசாங்க அதிபர், அபிவிருத்திசபைத் தலைவர், பொலிஸ் அதிபர் ஆகியோர் ஒரு குழுவாக இயங்கி மாவட்டத்தின் பாதுகாப்பை நிலை நிறுத்தவும், யாழ். வன்செயல் நஷ்டங்களுக்கு நஷ்டஈடு வழங்கவும், அபிவிருத்திசபைகளது நிறைவேற்றுக் குழுவுக்கு அதிகாரங்களை வழங்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. ஆகவே பேச்சுவார்த்தைகள் எத்தனை நடந்தாலும் எமது இலட்சியம் ஒருபோதும் விட்டுக்கொடுக்கப்படமாட்டாது. இலட்சியப்பயணம் தொடர்ந்து நடைபெறும் என்பது உறுதியானது என்றார்.

மாவை சேனாதிராஜா திருஇராஜ சண்முகரத்தினம் திரு. வ. சரவணமுத்து உட்படபலர் பேசினர்கள்.

## 220 பேர் பலி!

இஸ்லாமாபாத், செப். 19

வடக்குப் பாகிஸ்தானில் இடம்பெற்ற நிலவதிர்வில் 220 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலவதிர்வின்போது பலரி காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [வெ]

## கள்ளத்தராசு வியாபாரிகள்

[சாவகச்சேரி]

சாவகச்சேரியில் திடீர் விஜயத்தை மேற்கொண்ட விற்பனைத்திணைக்கள உதவி ஆணையாளர் திரு. த. மார்க்கண்டு சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட வியாபாரிகள் கள்ளத்தராசு வைத்திருந்ததையும் கிலோ அளவு இல்லாததராசில் பொருட்களை வழங்கியதையும் கண்டுபிடித்துள்ளார்

உதவி ஆணையாளர் அவ்வியாபாரிகள் மீது சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர ஏற்பாடுகள் செய்துவருகிறார்.

## மனித...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

நாட்டையும் ''மூழ்கடித்த'' பெருமை ரேகனையே சாரும் என்பதில் ஐயமில்லை.

அமெரிக்காவின் தேசிய நலன்களைப் பேணுவதற்காக மட்டும்தான் ரேகன் இம்மகா நாடுகளுக்கு 'வேட்டு' வைத்தார் என எண்ணிவிடாதீர்கள்.

அமெரிக்காவின் இந்த எதிர்பாராத திடீர் மாற்றம் நிகழ்ந்தபின், ''பிளன்ஷல் டைம்ஸ்'' என்ற பிரபல ஆங்கிலப் பத்திரிகை 'சூட்டை' அப்பலமாக்கியது: இராட்சத கம்பெனியான கெனக்கொட்டின் தலைமையில் பல முக்கிய சுரங்க-அகழ்வுக் கம்பெனிகள் ரேகனின் தேர்தல் பிரசாரத்துக்கு மிகத்தாராளமாகப் பணத்தை அள்ளி வீசினர்களாம்! புரிகின்றதா இப்பொழுது அமெரிக்க ஆட்சியாளருக்கும் நிர்வாகத்தினருக்கும், வணிகக் கூட்டுத்தாபனங்களுக்குமிடையில் எத்தகைய வணிக, அரசியல் பிணைப்புக்கள் நிலவுகின்றன என்பதற்கு இது நல்ல தோர் எடுத்துக்காட்டு.

ரேகனின் கண்களுக்கு மனிதகுலத்தின் பொதுநன்மையை விட, கரண்டலில் ஈடுபட்டிருக்கும் பெருங் கம்பெனிகளின் கொழுத்த ஆதாயமும், செல்சோற்றுக்கடனுமேமேல்.

காணி விற்பனைக்கு
உரும்பராய் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்க,
31, சிவப்பிரகாசம் ரோட், யாழ்ப்பாணம்.
அல்லது
சி. நவரட்ணம்,
[ஓய்வுபெற்ற தபால் அதிபர்] உரும்பிராய் கிழக்கு. 1009

சுன்னாகம் சந்தையில்

## தராசு பழுதானதால் உற்பத்தியாளர் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் சந்தையில் உள்ள விளையுயர்ந்த மேடைத் தராசு பழுதடைந்துள்ளதால், விளைபொருள் உற்பத்தியாளர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவதாகப் புகார் கூறப்படுகின்றது.

இச்சந்தையில் 'மத்தியஸ்தர்களாக' விளங்கும் தரகர்கள் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி, விளைபொருள் உற்பத்தியாளர்களை மோசடி செய்வதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

சுன்னாகம் பட்டின சபையால், விளைபொருள் உற்பத்தியாளர்களின் நலன் கருதி விலையுயர்ந்த இத்தமேடைத்தராசு, சந்தையில வைக்கப்பட்டிருந்தது. உற்பத்தியாளர்கள் தமது விற்பனவுப்பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு முன்பு, இத்தராசில் நிறுப்பதற்குவசதியாய் அமைக்கப்பட்டிருந்தது. இத்தராசு சிறு பிழை காரணமாக இன்னமும் திருத்தப்

வெற்றிடம் - பில்கிளார்க்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல புத்தகசாலைக்கு வியாபார அனுபவமுள்ள, அல்லது வியாபார ஆர்வம் உள்ள, ஆண் - பெண் பில்கிளார்க்குகளுக்கு உடனடி வெற்றிடங்களுண்டு. வீண்ணப்பதாரிகள், தமிழ், ஆங்கில அறிவும், நல்லொழுக்கமும், முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராயும், யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராயும் இருத்தல் அவசியம். தாம் எதிர்பார்க்கும் சம்பளத்துடன் மனுச்செய்க. விளம்பர இல. 04, மேற்பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

RADIO OFFICERS — P.M.G. Cert. Apr. 82

மற்றும் வெல்டிங் [Electric & Gas] வயறிங் முதலிய பயிற்சிகள். வெளிநாடுகளிலும் கப்பல்களிலும் தொழில்கள் பெற ஏற்றவை. நவீன முறையில் பொறியியலாளர்களால் நடாத்தப்படும். ஆங்கிலம் இலவசம். இலவசக் கையேட்டிற்கு விண்ணப்பிக்கவும்.

NATIONAL INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY
57, 58, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.

## 30-ம் திகதிவரை...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இவ்வூழியர்கள் தாங்கள் வேலைக்குச் செல்லாததையிட்டு யாழ் செயலகத்தில் தங்கள் கையொப்பங்களை இட்டுள்ளனர். மா]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக வாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 30ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் 20-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a Newspaper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 589, 8186.